தலைவர் மூலமாக பார்த்து, அந்த இடம் ஊரைவிட்டு சற்று ஒதுங்கிவிட்ட காரணத்தால் அது சரியில்லை என்று சொல்லப்பட்டு, இப்போது ஊருக்கு சமீபமாக இடம் வேண்டுமென்று கேட்டு, ஒரு விளையாட்டு மைதானம் அமைத்தால் எல்லோரும் விளையாடுவதற்கு வசதியாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்திலே, நான்கூட நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களோடு ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றபோதுகூட இந்தக் கோரிக்கையை அதே மேடையிலே வைத்து, அதற்கு நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பல்கலைக்கழகத்திலேயே ஒரு இடத்தை வாங்கிக் கொடுத்துவிடுகிறேன் என்ற உறுதிமொழியை அன்று உங்கள் முன்னாலேயே அளித்தார்கள்.

முற்பகல் 10–15

ஆகவே, இன்றைக்கு அந்த விளையாட்டு மைதானத்திற்காக நீங்கள் எந்த அளவுக்குக் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறீர்களோ அந்த அளவுக்கு அம்மாவட்டத்தைச் சேர்ந்த நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் அதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால் உறுதியாக அது நடைபெற்றுவிடும் என்பதைத் தெரிவித்து அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

9—

சாலைப் பாதுகாப்பு

***124567—டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிழக்கு கடற்கரைச் சாலையில் சீக்கனாங்குப்பம் அருகில் அபாயகரமான வளைவுகளால் ஏற்படும் சாலை விபத்துகளைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ள சிக்கானாங்குப்பம் என்கிற இடம் சென்னையிலிருந்து பாண்டிச்சேரியை இணைக்கக்கூடிய கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ளது. இந்தச் சாலையிலுள்ள வளைவுகளைச் சரிசெய்து விபத்துகளைத் தடுக்கும் வகையில் ரூபாய் 108 இலட்சம் மதிப்பில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, முதல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் யாரும் பணியை எடுக்க முன்வரவில்லை. இரண்டாவது ஒப்பந்தப்புள்ளி அழைக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அதற்குரிய நடவடிக்கை எடுத்து, அந்த வளைவுகளைச் சரிசெய்து விபத்துகளைத் தடுக்க துறை நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டிருக்கும் சிக்கனாங்குப்பம் பகுதியில் இ.சி.ஆர். சாலையில் கடந்த ஆண்டு மட்டும் 100-க்கும் மேற்பட்ட சாலை விபத்துகளும், 50-க்கும் மேற்பட்ட உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். மிக விரைவில் அந்தப் பணியை நிறைவேற்ற வேண்டும். உடனடியாக இதற்குத் தீர்வு காணும் வகையில் காவல் துறையின்மூலம் செக்-போஸ்ட்டுகளை அமைத்து, வேகமாக வரும் வாகனங்களின் வேகத்தைத் தடுக்க வேண்டும்.

இதுபோன்ற விபத்துகள் அதிகமாக நடைபெறும் இடங்களில் சென்னையிலுள்ளதுபோல கண்காணிப்பு கேமராக்களைப் பொருத்தி அதிவேகமாக வரும் வாகனங்களைக் கண்டறிந்து அடுத்த செக்-போஸ்ட்டிலேயே அந்த வாகன ஓட்டுநர்களின்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, இ.சி.ஆர். சாலையை ஒட்டியுள்ள கிராமப் பகுதிகளில் வெளிச்சம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் இரவு நேரங்களில் அதிக அளவில் விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகையால் அந்த இடங்களிலாவது அதிகமான ஒளி விளக்குகளைப் பொருத்த வேண்டும். இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் செய்ய முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரைச் சாலையென்பது சென்னையிலிருந்து, குறிப்பாக திருவான்மியூர் முதல் பாண்டிச்சேரி வரையுள்ள சாலையாகும். அந்தச் சாலை ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியோடு இருவழித் தடமாக மாற்றப்பட்டு வரி வசூல் செய்யக்கூடிய சாலையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. அந்தச் சாலையின் வளைவுகளிலே விபத்துகள் அதிகம் நடக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைச் சரி செய்வதற்காகத்தான் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இந்த அரசு பொறுப்பேற்றது முதல் black spot என்கிற முறையிலே ஏறத்தாழ 350 இடங்களைத் தேர்வு செய்தோம். அதையெல்லாம் இப்பொழுது படிப்படியாக சரிசெய்து வந்திருக்கிறோம். அதை நிறைவு செய்யக்கூடிய இறுதிக் கட்டத்திலே இருக்கிறோம். ஒப்பந்தப்புள்ளியும் கோரப்பட்டுவிட்டது. மேலும், இரண்டாவதாக இன்னொரு ஒப்பந்தப்புள்ளியை வெளியிட்டுப் பார்த்துவிட்டு, யாரும் முன்வரவில்லையானால் துறையின் மூலமாகவே அந்த வளைவுகளைச் சரிசெய்வதற்கு நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

சில இடங்களிலே இருள் சூழ்ந்து கிடக்கிறது என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். முடிந்த அளவு நமது T.N.R.D.C. மூலமாக அந்தச் சாலை பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே அந்த நிறுவனத்திடம் சொல்லி அதற்குரிய விடிவுகளை ஏற்படுத்துவோம். மின் விளக்குகளை அமைத்தாலும்கூட சில இடங்களிலே அந்த உள்ளாட்சிகள்தான் அதற்குரிய மின் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்த அளவுக்கு அந்த உள்ளாட்சிகள் அதற்குரிய வலுவோடு, நிதியாதாரத்தோடு இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பாக அந்த இடங்களைக் குறிப்பிட்டு எழுதித் தருவாரானால் அந்த இடங்களில் அந்த உள்ளாட்சிகள் மூலமாகவோ அல்லது துறையின் மூலமாகவோ விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

2011 பிப்ரவரி 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல, திண்டிவனம் சாலையிலும் நிறைய அபாயகரமான வளைவுகள் இருக்கும் காரணத்தினால் அந்தச் சாலையிலும் விபத்துகள் ஏற்படுகின்றன. உதாரணத்திற்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி அவர்களும் அவருடைய குடும்பத்தாரும் கடந்த மாதம் விபத்தில் சிக்கியதற்குக் காரணம் ஒரு அபாயகரமான வளைவுதான். ஆகையால் அத்தகைய வளைவுகள் இருக்கும் G.S.T. சாலையிலும் தடுப்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா? அதேபோல், Toll Plaza-வில் வசூலிக்கப்படும் கட்டணம் மிகவும் அதிகமாக இருக்கின்றது. அதை 50 விழுக்காடாகக் குறைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜி.எஸ்.டி. சாலை, சென்னையிலுள்ள முத்துசாமி பாலத்திலிருந்து தாம்பரம் வரை மத்திய அரசின் நிதி உதவியைப் பெற்று, மாநில அரசு நிதியோடு சேர்த்துப் பராமரிக்கப்பட்டு வருகிறது. தாம்பரத்திலிருந்து திண்டிவனம் வழியாகச் செல்லக்கூடிய இந்த தேசிய நெடுஞ்சாலை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் 4 வழிச் சாலையாக மாற்றப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. அதில் நடைபெறக்கூடிய விபத்துகள் பற்றி நம்முடைய நெடுஞ்சாலைத் துறை மூலமாக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கவனத்திற்கு நாங்கள் எடுத்துச் சென்றிருக்கிறோம். தற்போது அதனை முடிந்தவரை சரிசெய்து கொண்டிருக்கிறார்கள். விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும்போது சில இடங்களிலே தேவைப்படுகிற பாலங்களையெல்லாம் அமைக்காமல் விட்டுவிட்டனர். தற்போது அதையும் குறிப்பிட்டுக் கொடுத்திருக்கிறோம். அதற்குறிய நடவடிக்கையை இந்தத் துறை தொடர்ந்து எடுத்துக்கொண்டு வருகிறது.

வரி வசூலைப் பொறுத்தவரையில், மத்திய அரசு அதற்குரிய கட்டணங்களை நிர்ணயம் செய்து இன்னின்ன வாகனங்களுக்கு இவ்வளவு வசூல் செய்ய வேண்டும் என்று தனியார் பங்களிப்போடு செய்யக்கூடிய இந்தத் திட்டத்தில் விதிமுறைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்குரிய கட்டணத்தை மட்டும் வசூல் செய்தால் நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. மத்திய அரசு வழிகாட்டியுள்ள அந்தக் கட்டணத்தைவிட கூடுதலாக வசூல் செய்யப்படுமானால் அதற்குரிய புகார் வருமானால் அது குறித்து அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். மத்திய அரசினுடைய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு அமைச்சர் திரு. கமல்நாத் அவர்கள் இரண்டு, மூன்று முறை வாகன ஓட்டுநர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு அதற்குரிய அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள்.

கிழக்குக் கடற்கரைச் சாலையைப் பொறுத்தவரையில், அது தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய சாலை. அதற்குரிய கட்டணங்களை அதிகப்படுத்தவேண்டுமென்று டி.என்.ஆர்.டி.சி. நிறுவனத்தின்மூலம் அரசுக்குக் கோரிக்கை வந்திருக்கிறது. கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து முடிவெடுக்க இருக்கிறார்கள். அந்த சுங்க நிதி, சாலைப் பராமரிப்புக்குக்கூட போதவில்லை என்பது அந்த நிறுவனத்தினுடைய கோரிக்கையாக உள்ளது. எனவே, அந்த அளவிற்கு குறைவான கட்டணத்தைத்தான் அந்த நிறுவனம் தற்போது வசூல் செய்துவருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய கருத்துகளை இந்த அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கமலக்கண்ணன்.

திரு. ஜெ. கமலக்கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி வழியாக மேல்மருவத்தூர் ஆலயத்திற்கு ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களிலிருந்து ஒரு நாளைக்கு சுமார் 700 பேருந்துகள் வந்து செல்கின்றன. வந்தவாசி மற்றும் மேல்மருவத்தூர் வழியில் நெடுஞ்சாலையில் சிறு பாலங்கள் உள்ளதால் இந்தச் சிறு பாலங்களில் பல விபத்துகள் நடக்கின்றன. இந்த விபத்துகளைத் தடுக்கும் வகையில் சிறு பாலங்களை அகலப்படுத்த இந்த நிதியாண்டிலேயே நிதி ஒதுக்கி அந்தப் பணிகளைச் செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2011 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்தச் சாலை மேல்மருவத்தூரில் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து வந்தவாசி வரை செல்லக்கூடிய மாநில நெடுஞ்சாலையாகும். வாகனப் போக்குவரத்திற்கேற்ப அந்தச் சாலையை அகலப்படுத்தி இருக்கிறோம். அதில் இருக்கக்கூடிய சிறு பாலங்கள், கல்வெர்ட்டுகள் ஆகியவற்றை தற்போதுள்ள நிதியாதாரத்தை வைத்துக்கொண்டு தொடர்ந்து படிப்படியாக அகலப்படுத்தி வருகிறோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் மாநிலம் முழுவதும் அதுபோன்ற நடவடிக்கைகளை துறை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துகளைத் தடுக்கின்ற வகையில் அனைத்து நகரங்களிலும் பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகளின் அருகிலே நெடுஞ்சாலைத் துறை மூலமாக வேகத் தடைகள் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளில் வேகத்தடைகள் அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி வழங்குவதில்லை. எனவே, அதனாலேகூட சில இடங்களில் விபத்துகள் நடந்துவிடுகின்றன. மாநில அரசு மூலமாக நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் இருக்கக்கூடிய சாலைகளில் முடிந்த அளவிற்கு வேகத் தடை அமைத்து பள்ளிக்கூடங்கள் மற்றும் மருத்துவமனைகள் உள்ள இடங்கள் மற்றும் மக்கள் அதிகமாக நடமாடக்கூடிய இடங்களில் வேகத்தடை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதுகுறித்து எச்சரிக்கைப் பலகையும் வைத்து முடிந்த அளவிற்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருக்கிறோம். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு உலக வங்கியினுடைய வழிகாட்டுதல்படி செயல்பட்டு, வாகனங்களினுடைய எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும்கூட தமிழகத்தில் சாலை விபத்துகள் குறைந்திருக்கின்றன. அந்த வழிகாட்டுதலின்படி விபத்துகள் என்பது 17 சதவிகிதத்திற்குள் இருக்கவேண்டும் என்று உலக வங்கி சுட்டிக் காட்டியுள்ளது. அதாவது ஆண்டு ஒன்றுக்கு 10,000 வாகனங்களுக்கு

[2011 பிப்ரவரி 5

17 சதவிகிதம் இறப்பு என்பதற்குள் கொண்டு வரவேண்டும் என்று உலக வங்கி வழிகாட்டியிருக்கிறது. ஆனால் இந்த அரசு 14 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறது. எனவே உலக வங்கி வழிகாட்டியதைவிட, வாகன விபத்து மூலம் ஏற்படும் உயிரிழப்பை இந்த அரசு அதிகமாகத் தடுத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

திரு. எஸ்.வி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–வது வருடம் மயிலாப்பூர் தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட என்னை, இன்றுவரை மிகச் சிறப்பாக ஆதரித்து வந்த உங்களுக்கும், ஆறாவது முறையாக மீண்டும் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்படவுள்ள நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அன்புச் சகோதரர் துணை முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், அனைத்து நண்பர்களுக்கும் என்னுடைய நன்றியை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

இன்றுவரை எந்தக் கட்சியையும் சேராத ஒரு உறுப்பினராக இருக்கும் நான், இந்தக் கேள்வியைக் கேட்கும் அதேசமயம், எனக்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் காணிக்கையாக்கிக்கொண்டு தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரிடம் ஒரு கேள்வியைக் கேட்க விரும்பப்படுகின்றேன். நெடுஞ்சாலைகளில் இருக்கும் Central Median, Bridges போன்ற இடங்களில் எல்லாம் reflector பொருத்தப்பட்டால் விபத்து குறைவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று சொல்லப்படுகிறது. அதேசமயம் சில பாலங்களை அழகுபடுத்தக்கூடிய வகையில் tubes ஒன்றரை அடி இடைவெளியில் போட்டிருக்கிறார்கள். அது அழகைவிட ஆபத்தை அதிகமாக விளைவிக்கக்கூடியது. சில இடங்களில் பெற்றோர்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அந்த Bridge ஓரமாக அழைத்துச் செல்லக்கூடிய சூழ்நிலை இருப்பதால் நமக்கு அழகைவிட பாதுகாப்பு முக்கியம் என்ற எண்ணத்தில் பாதுகாப்பு கருதி, குறைந்தது அந்தப் பாலத்தில் 3 அடி உயரத்திற்கு கான்கிரீட் சுவர் போட்டு, அதற்கு மேல் அழகுபடுத்தும் பணி நடைபெற்றால் பாதுகாப்பு அதிகமாக இருக்கும். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று கேட்டுக்கொள்கிறேன். இங்குள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

2011 பிப்ரவரி 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலையினுடைய பராமரிப்பு குறித்து, சாலை அமைக்கக்கூடிய தொழில்நுட்பங்கள் குறித்து, டெல்லியைத் தலைமையிடமாகக் கொண்டு அமைந்திருக்கிற Indian Road Congress என்கிற குழுமம்தான் மாநில அரசுகளில் நெடுஞ்சாலைத் துறைக்கு வழிகாட்டுகிறது. அதனுடைய மாநாடுகூட திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றது. அந்த மாநாட்டை தொடங்கிவைக்கிற வாய்ப்பையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எனக்கு வழங்கினார்கள். அங்கே Indian Road Congress Chairman மற்றும் உறுப்பினர்கள் எல்லாம் சாலையினுடைய பராமரிப்பு தமிழ்நாட்டில் நன்றாக இருக்கிறது என்பதை பாராட்டியதோடு, ஆலோசனையும் சொன்னார்கள். தளவாடச் சாமான்கள் எல்லாம் கூடுதல்படுத்தப்பட வேண்டும். அதாவது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல delineators–ஐ அதிகப்படுத்தி, வளைவுகள் இருக்கக்கூடிய இடங்களையெல்லாம் வாகன ஓட்டிகளுக்குக் குறிப்பிட்டுக் காட்டி, விபத்துகளைத் தடுப்பதற்கும், ஊர்களுக்குப் பிரிந்து செல்லக்கூடிய, கிராமங்களுக்கு செல்லக்கூடிய இடங்களில் பெயர்ப்பலகைகளையெல்லாம், வழிகாட்டிகளையெல்லாம் அதிகப்படுத்துங்கள் என்று ஆலோசனை வழங்கினார்கள். அதிலிருந்து தொடர்ந்து இந்தத் துறை அதற்குரிய முக்கியத்துவத்தை வழங்கி வருகிறது.

அதேபோல், பாலத்தைப் பொறுத்தவரையில், பராமரிப்பு மாதம் என்று நிர்ணயித்து கடந்த மாதம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிறப்பு அனுமதியின் பேரில் பழைய பாலங்களை அரசு பராமரித்திருக்கிறது. அதற்கு ஏறத்தாழ ரூ.35 கோடியை இந்த அரசு செலவு செய்திருக்கிறது.

பாலத்தில் செல்லக்கூடிய வாகனங்களுக்கும் நடந்து செல்பவர்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாமல், ஆபத்து இல்லாத சூழ்நிலையை உருவாக்குவதற்கு—கடந்த காலங்களில் எல்லாம் நகரப் பகுதிகளிலே மட்டும்தான் நடைமேடை என்கிற ஒரு மேடை அமைக்கப்பட்டது. ஆனால் இந்த அரசு

பொறுப்பேற்றதிலிருந்து தணிக்கைத் துறையினுடைய ஆட்சேபனையையும் தவிர்த்துவிட்டு உயிர்தான் முக்கியம் என்கிற காரணத்தால் நடைமேடையை எல்லா இடங்களிலும் இந்தத் துறை அமைத்து வருகிறது. எனவே பாலத்திலே மக்கள் பாதுகாப்போடு செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, பாலத்தின்மீது ஏற்படக்கூடிய விபத்துகளின்போது, வாகனங்கள் பாலத்தின்மீது மோதுகின்ற நேரத்தில் தவறி நீர்வழிப் பாதையில் விழக்கூடிய ஒரு சூழ்நிலையில் பெரிய விபத்துகளை இப்போது தடுத்திருக்கிறோம். எனவே, துறை தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையை ஏற்று செயல்படுத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் பெய்த கடும் மழையினால் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. அவற்றில் குறிப்பாக கடலூர் மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டது. அந்த வகையில் கும்பகோணம்—பண்ருட்டி வழியாகச் செல்கின்ற சாலையும், சிதம்பரம்—சேத்தியாதோப்பு சாலையும், மடப்பட்டு சாலையும், அரசூர் சாலையும், மாவட்டம் முழுவதும் இருக்கிற நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகள் மிகவும் பழுதடைந்து பெரிய அளவில் பள்ளங்களும் குழிகளும் ஏற்பட்டு அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு பெருமளவு உயிர்ச்சேதங்கள் ஏற்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையீட்டின் பேரில், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இதுபோன்ற இயற்கைப் பேரிடர் காலங்களில் உடனடியாக அந்தச் சாலைகளைச் செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளியூர் இரு சக்கர வாகன ஓட்டிகள் அந்தப் பள்ளங்களின் ஆழம் தெரியாமல் விழுந்து உயிர் விடுகின்ற கொடூரம் நடந்தேறிக்கொண்டிருக்கிறது. அதனால் தமிழ்நாடு முழுவதும் மழைக் காலங்களில் ஏற்பட்டுள்ள குண்டு, குழிகளையெல்லாம் உடனடியாகச் செப்பனிடுவதற்கு சிறப்பு நிதியை ஒதுக்கி போர்க்கால அடிப்படையில் அந்தப் பணிகளைச் செய்வதற்கு அரசு முன்வருமா?

2011 பிப்ரவரி 5]

அதேவேளையில் முதலாண்டு, தங்கள் துறையின் சார்பில் அறிவித்த அறிவிப்பில் பண்ருட்டி தொகுதி, வடக்குத்துப் பகுதியில் கம்மா ஓடைப்பாலம் கட்டப்படும் என்று அறிவித்தீர்கள். ஐந்து ஆண்டுகள் நிறைவுபெறுகின்றது. இதுவரையிலும் அந்தப் பணிகள் தொடங்கப்படவில்லை. NHAI எடுத்த காரணத்தால் அவர்கள் கட்டுவார்கள் என்று அறிவித்தீர்கள். அவர்களும் கட்டவில்லை. உடனடியாக அந்தப் பாலத்தையும் கட்டி அங்கு ஏற்படுகின்ற உயிரிழப்பையும் தடுப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய சாலை விக்கிரவாண்டி–கும்பகோணம்–தஞ்சாவூர் சாலை என்கின்ற தேசிய நெடுஞ்சாலையாகும்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: இந்தச் சாலை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பராமரிப்பில் இருக்கக்கூடிய சாலையாகும். இது குறித்து பலமுறை நாங்கள் மத்திய அரசுக்கு மாநில அரசின்மூலமாக அறிவுறுத்தியிருக்கிறோம். அதனால் இடையிடையே இந்தச் சாலை பராமரிக்கப்பட்டது. இப்போது ஏற்பட்ட மழை, வெள்ளத்தின் காரணமாக இந்தச் சாலை அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தச் சாலையைத் தொடர்ந்து பராமரிப்பதற்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தை வலியுறுத்துவோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட வடக்குத்து பாலத்திற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏற்கெனவே அனுமதி வழங்கிவிட்டார்கள். நாங்கள் அறிவிப்பும் செய்துவிட்டோம். ஆனால், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அதை 10 மீட்டர் அகலம் கொண்ட சாலையாக மாற்றுகிறோம், எனவே, தடையின்மைச் சான்று வழங்க இயலாது என மறுத்துவிட்டது. எனவே, அதைக் கட்ட

இயலவில்லை. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக அதைக் கட்டுவதற்கும், அதேபோல, பண்ருட்டியில் அமையவிருக்கின்ற இரயில்வே லைனைக் கடக்கக்கூடிய பாலத்தையும் கட்டவும் அரசு நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சாலைகளைத் தற்காலிகமாகப் பராமரிப்பதற்கும், நிரந்தரமாகப் பராமரிப்பதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் நிதி வழங்கப்பட்டிருக்கின்றது. விரைவில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு சாலைகள் நல்ல முறையில் உருவாக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 10, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

4. இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2011–2012, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011–2012 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம்.

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்"

என்னும் அய்யன் வள்ளுவன் குறள்மொழிக்கு ஏற்ப, ஏற்ற காலம் அறிந்து, உரிய இடத்தில் தகுந்த முயற்சி மேற்கொண்டு, அல்லும் பகலும் அயராது உழைத்து, தான் ஏற்றுள்ள பெரும் பொறுப்பிற்கேற்ற கடமையை நிறைவேற்றுவதில் வல்லவராகவும், நூலறிவுடன் மதிநுட்பம் வாய்ந்தவராகவும் விளங்கும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் (மேசையைத் தட்டும் ஒலி) 2006 ஆம் ஆண்டு மே திங்களில், ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த அரசு, இதுவரை தமிழக மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்காகவும், வறியவர்கள் வாழ்வு பெறுவதற்காகவும், தமிழக மக்கள் பசியும், பிணியும் நீங்கி, வசியும் வளனும் சுரக்கும்